முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பிங்களமுனிவர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

05.10.2018, வெள்ளிக்கிழமை

1. **சிவராஜ யோகியே அரங்கா**
**சிவகணங்கள் துணைபட**
**அவணியை காக்க அறம் வளர்க்கும்**
**அண்ணலே ஆறுமுக ஞானியே**

2. ஞானிகளின் பூசை விதி தந்து
ஞானம் வளர்க்கும் தவசியே
ஞானிகள் சக்தி கலியுகத்தை
நல்வழிகாட்ட வெளிப்பட்டுவர

3. வருகவே அரங்கனை நோக்கி
வருகின்ற மக்களெல்லோரும்
தருமபலம் ஞானபலம் அடைவரெனக் கூறி
தாமுரைப்பேன் ஒளி சூட்சும நூலை

4. நூலை **விளம்பி நங்கை திங்கள்**
**நிலமதனில் மூவாறோர் திகதி புகர் வாரம்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 19ம் நாள் 05.10.2018, வெள்ளிக்கிழமை)**
**ஞாலமதில் பிங்களமுனிவர் யானும்**
நாட்டிடுவேன் உலகோர் நலம் பெற

5. நலம் தரும் ஆறுமுக சூட்சும
ஞானசக்தியை மக்களடையவே
பலம் தரும் ஞானிகள் பூசையோடு
பரோபகாரம் வளர்க்கும் தருமம்

6. தருமம் செய்து மக்களிடையே
தன்னார்வ தொண்டு பெருக்கி வர
தருமம் வழி பொருளுதவி செய்து
தானதருமம் வளர்த்து வருக

7. வருகவே தரும பலம் மிக்க
வல்லமையான தருமயுகமாகும்
முருகப்பெருமான் வழிபாடுதனை
மொழிகுவேன் உலகமெங்கும் செய்து

8. செய்துமே மக்கள் எல்லோரும்
சிறப்பான திருவிளக்கு பூசைகளும்
அய்யமற எல்லா திக்கிலும் செய்து
அன்னதானமதும் வளர்த்து வர

9. வருகவே தெய்வ தருமபலம்
வல்லமைபட எங்கும் பரவி
முருகன் ஆளுமை தாங்கிய
முழுமையான ஞான ஆட்சி மலரும்

10. மலரும் மக்களை காக்கின்ற
மண்ணுலகை பாதுகாக்க வல்ல
வளரும் ஞான ஆட்சியாக
வடிவேலன் தலைமை கொண்ட

11. கொண்டநல் ஞானிகள் ஆட்சியாக
குவலயம் சடுதி மாறும்
தொண்டர்களாகி அரங்கன் வழி சேர
தெய்வீக ஞானபலம் பெருகும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் பிங்கமுனிவர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

சிவராஜயோகம் செய்து வெற்றி கண்டிட்ட சிவராஜயோகி அரங்கமகா தேசிகனே, சிவகணங்களின் துணையோடு இவ்வுலகை காத்திட அளவிலாது அறம் வளர்க்கின்ற அண்ணலே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானியே, ஞானமளித்து ஜென்மத்தைக் கடைத்தேற்றும் வல்லமைமிக்க ஞானிகளை வணங்குகின்றதான ஞானிகள் பூஜைவிதிகளை உலக மக்களுக்கு உபதேசித்து ஞானம் வளர்க்கும் மகா தவசியே ஞானிகள் அருளாற்றல் உலகமெலாம் வெளிப்பட்டு கலியுகத்தினை நல்வழிகாட்டிட வெளிப்பட்டு வருகின்றபடியினாலே ஆறுமுக அரங்கமகா தேசிகனை கண்டு தரிசித்து பூஜிக்கின்ற மக்களெல்லாம் தருமபலம், ஞானபலம் அடைவார்கள் எனக் கூறி உலக நலம் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 19ம் நாள் 05.10.2018, வெள்ளிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே பிங்களமுனிவர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பிங்களமுனிவர்.

எல்லா நலங்களையும் தந்தருளும் முருகப்பெருமானின் ஞானசக்தியை உலக மக்களிடையே சர்வபலம் தரும் ஞானிகளின் திருவடி பூஜைகளோடும், மக்களின் மனதில் கருணையையும் ஜீவதயவையும் வளர்க்கின்ற பரோபகார செயலான தருமங்களை தாராளமாக செய்து மக்களிடையே தன்னார்வம்மிக்க பொதுநல தொண்டுகளை செய்தும் அரங்கனின் தருமங்களுக்கு பொருளுதவிகள் செய்தும் தானதருமங்களை உலகமெலாம் பெருக்கி வர தருமபலம்மிக்க வல்லமையான தருமயுகமாக ஆகிடும்.

தூய வழிபாடான முருகப்பெருமானை வழிபடும், முருகப்பெருமான் வழிபாடுகள் உலகினில் அதிக மக்கள் வழிபாடுகளை செய்து ஜோதி வழிபாடாய் மக்கள் சிறப்புமிக்க திருவிளக்கு பூஜைகளாக செய்து வர வேண்டும்.

உலக மக்களெல்லாம் சிறப்புமிக்க சரவணஜோதி வழிபாடுகளை திருவிளக்கு பூஜைகளாக செய்வதுடன் உலகின் எல்லா திசைகளிலும் திருவிளக்கு பூசைகளை செய்து தர்மபலம் பெருக்கும் அன்னதானங்களை அதிகமாக செய்து தர்மபலத்தினை வளர்த்து வர வேண்டும்.

அவ்விதமே உலகமெலாம் செய்து வர, உலகமெங்கும் தருமபலம் பெருகி வல்லமையோடு உலகமெலாம் பரவி முருகப்பெருமானின் ஆட்சியை உண்டாக்கும். முழுமை அடைந்த ஞான ஆட்சியாக மலர்ந்திடும். அது மக்களைக் காக்கின்ற உலகினை பாதுகாக்க வல்லமைமிக்க வளரும் ஞான ஆட்சியாக வடிவேலன் முருகப்பெருமானின் தலைமையை உடைய ஞானிகள் நடத்தும் ஞானிகள் ஆட்சியாக இவ்வுலகம் விரைந்து மாறிடும்.

உலக மக்களெல்லாம் அற்புதம் நிறைந்த உலகப் பெருமாற்ற மகா ஞானி ஆறுமுக அரங்கனின் தொண்டர்களாக ஆகி அரங்கனின் கொள்கைகளை ஏற்று கடைப்பிடித்து அரங்கனை பின் தொடர்ந்து வரவர உலகமெலாம் தெய்வீக பலம் பெருகும் என உலகறிய உரைக்கின்றார் மகான் பிங்களமுனிவர்.

–சுபம்–